பக்கங்கள்: ஆறு

யாழ்ப்பாணம் நல்லூர் கிராமசபை

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 6-00

சுடர் 10 வள்ளுவர் ஆண்டு 2026 புரட்டாதி 10 புதன்கிழமை (27-09-1995) UTHAYAN A Lively National Tamil Daily கதிர் 307

# படைகளை எதிர்கொள்வதில் நாம் உறுதியாக உள்ளோம்!

## வடமராட்சியில் புக்காரா நோட்டம்

வடமராட்சி, செப். 27

புக்காரா விமானம் ஒன்று நேற்று நண்பகல் வடமராட்சி கரையோரப் பகுதிகள் மீது பறந்து நோட்டமிட்டது.

இதனால் மக்கள் பதற்றமடைந்தனர். பதுங்கு குழிகளில் பாதுகாப்புத் தேடினர்.

(ஐ-173-ரீ)

## தியாகி திலீபன் நினைவு கூட்டத்தில் பாலகுமாரன்

யாழ்ப்பாணம். செப்ரெம்பர் 27

எமது விடுதலைப் போராட்டத்தில் இன்று முக்கியமான– இறுதியான – தீர்க்கமான காலகட்டத்தில் நாம் நிற்கின்றோம்; அரச படைகளை எதிர்கொள்வதில் நாம் மிக உறுதியாக இருக்கின்றோம்; மிகத் தெளிவாக இருக்கின்றோம்.

விடுதலைப் புலிகள் பிரமுகர் திரு. வே. பாலகுமாரன் இவ்வாறு தெரிவித்தார்.

தியாகி திலீபனின் எட்டாவது ஆண்டு நினைவின் இறுதி நாளான நேற்று இரவு நல்லூர் கந்தசுவாமி கோவில் முன்றிலில் நடந்த நினைவுக்

[6 ஆம் பக்கம் பார்க்க]

## வடமராட்சி மீது மீண்டும் ஷெல் வீச்சு! வயிறு பிளந்த நிலையில் பெண் பலி!!

### கணவனும் பிள்ளைகளும் படுகாயம்!!!

வடமராட்சி, செப். 27

பலாலி முகாமில் இருந்து மீண்டும் நேற்று அதிகாலை வடமராட்சிப் பகுதி மீது படையினர் ஷெல் தாக்குதல்களை நடத்தினர்.

அதிகாலை 5 மணியளவில் ஏவப்பட்ட ஷெல்லுக்கு இலக்காகி வல்வெட்டித்துறை தெணியம்பைப் பகுதியில் பெண் ஒருவர் பலியானார். அவரது கணவரும் பிள்ளைகளும் படுகாயமடைந்தனர்.

தெணியம்பையைச் சேர்ந்த திருமதி வள்ளிநாயகி சந்திரலிங்கம் [வயது 30] என்ற குடும்பப் பெண்ணே உயிரிழந்தவராவார்.

ஷெல் தாக்குதல்கள் ஆரம்பமானதும் தனது மகளைத் தூக்கிக்கொண்டு பதுங்கு குழியை நோக்கி ஓடியபோது வீட்டின் மீது ஷெல் விழுந்து வெடித்தது.

தனது மகளைக் கட்டியணைத்தபடி வயிறு பிளந்த நிலையில் அவர் பலியானார்.

அவரது கணவரான தியாகராசா சந்திரலிங்கம் (வயது 42), மகனான ச. ரமேஸ் (வயது 14) மகளான ச. சசிகலா (வயது 2) ஆகிய மூவருமே படுகாயமடைந்தனர்.

படையினர் ஏவிய மற்றும் சில ஷெல்கள் தும்பளை தெற்கு, கற்கோவளம் பகுதிகளிலும் விழுந்து வெடித்தன.

ஷெல்கள் சில இடங்களில் வீடுகளில் விழுந்து வெடித்தபோதும் மக்கள் வீடுகளை விட்டு வெளியேறியிருந்ததால் உயிரிழப்புகள் ஏற்படவில்லை.

(ஐ-173-ரீ)

# தியாகி திலீபனுக்கு நேற்று எழுச்சி பொங்க அஞ்சலி

## உண்ணாவிரத நிகழ்வில் மக்கள் வெள்ளம்

யாழ்ப்பாணம், செப். 27

தியாகி திலீபனின் எட்டாம் ஆண்டு நினைவுதினம் நேற்று தமிழீழப் பகுதிகளில் மிகவும் எழுச்சியுடனும், உணர்வு பூர்வமாகவும் அனுஷ்டிக்கப்பட்டது.

முக்கிய சந்திகள், பொது இடங்கள், வீடுகளில் அமைக்கப்பட்ட திலீபன் நினைவுப் பந்தல்களில் காலையிலேயே மக்கள் தியாகியின் திருவுருவப்படங்களுக்கு விளக்கேற்றி மலரஞ்சலி செலுத்தினர்.

கோட்ட ரீதியாக அமைக்கப்பட்ட விசேட பந்தல்களில் ஏனைய நாள்களைவிட கூடுதலான மக்கள் பல்லாயிரக்கணக்கில் உண்ணாவிரதம் அனுஷ்டித்தனர்.

காலை 7 மணிக்கு உண்ணாவிரதம் ஆரம்பமாகியது; மாலை 5 மணிக்கு முடிவுற்றது.

உண்ணாவிரதப் பந்தல்களில் கவியரங்குகள், சொற்பொழிவுகள், கலை நிகழ்ச்சிகள், பஜனைகள் என்பன சிறப்பு நிகழ்வுகளாக இடம்பெற்றன.

தியாகி திலீபன் வீரச்சுவர்க்கமடைந்த நேரமான மு.ப. 10.48 மணிக்கு அனைத்து இடங்களிலும் திலீபனின் திருவுருவப்படத்துக்கு ஒளிச்சுடர் ஏற்றப்பட்டது. அவ்வேளை எல்லோரும் எழுந்து நின்று திலீபனுக்கு மௌன அஞ்சலி செலுத்தினர். தொடர்ந்து மலரஞ்சலி செய்யப்பட்டது.

மு. ப. 10-48 மணிக்கு யாழ். கோட்டையில் மக்களும் போராளிகளும் மௌன அஞ்சலி செலுத்தினர்.

யாழ். மாவட்ட அரசியல் துறைப் பொறுப்பாளர் இளம்

[5 ஆம் பக்கம் பார்க்க]

## 6 கோடி 50 லட்சம் ரூபா தினமும் போருக்கு செலவு!

### பிரதமர் ஸ்ரீமாவோ கவலை

கொழும்பு, செப். 27

ஆறு கோடி 50 லட்சம் ரூபா நாளாந்தம் யுத்தத்துக்குச் செலவு செய்யப்பட்டு வருகிறது. ஒரு நிரந்தரத் தீர்வு எட்டப்படாமல் யுத்தம் இப்படியே தொடர்ந்தால் இராணுவச் செலவுகள் இன்னும் அதிகரிக்கும். இதனால் நாட்டின் அபிவிருத்தி பாதிக்கப்படும்.

— பிரதமர் ஸ்ரீமாவோ பண்டாரநாயக்கா இவ்வாறு கவலை தெரிவித்துள்ளார்.

முன்னாள் பிரதமர் எஸ். டபிள்யூ. ஆர். டி. பண்டாரநாயக்காவின் நினைவு தினத்தை ஒட்டி நேற்று நாட்டு மக்களுக்கு விடுத்த செய்தியிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

[6 ஆம் பக்கம் பார்க்க]

## வெலிகந்த – மட்டக்களப்பு வீதியில் கடும் மோதல்! படை அதிகாரி பலி!!

கொழும்பு, செப். 27

கிழக்கு மாகாணத்தில் நேற்று விடுதலைப் புலிகளுக்கும் இராணுவத்தினருக்கும் இடையே நடந்த சண்டையில் இராணுவ அதிகாரி ஒருவர் பலியானார்.

வெலிகந்த – மட்டக்களப்பு பிரதான வீதியில் 118 ஆவது மைல்கல் பகுதியில் இம்மோதல் இடம்பெற்றது.

இப்பகுதியில் விடுதலைப் புலிகளுக்கும், இராணுவத்தினருக்கும் இடையே நீண்ட நேரம் சண்டை இடம்பெற்றது.

மோதலில் ஈடுபட்ட இராணுவ அணியின் அதிகாரி இச்சம்பவத்தில் கொல்லப்பட்டார் என்றும் —

மோதலில் சிக்கி உயிரிழந்த பொதுமகன் ஒருவரின் சடலம் பின்னர் அப்பகுதியில் இருந்து மீட்கப்பட்டதாகவும் பாதுகாப்பு அமைச்சின் நடவடிக்கைத் தலைமையகம் அறிவித்தது.

[ஐ-5]

## குடாநாட்டில் மாவுக்குத் தட்டுப்பாடு – எனினும் வடக்குக்கான மாவுடன் "ஹெந்தல" மீண்டும் கொழும்புக்கு செல்கிறது

யாழ்ப்பாணம், செப். 27

குடாநாட்டுக்கு மா ஏற்றி வருவதற்காக யாழ். அரச அதிபரால் வாடகைக்கு அமர்த்தப்பட்டுள்ள "ஹெந்தல" கப்பல் திருமலையில் இருந்து இரண்டாவது தடவையாக மீண்டும் கொழும்புக்கு மா ஏற்றிச் செல்ல இருப்பதாகத் தெரியவந்துள்ளது.

குடாநாட்டில் மாவுக்கு தட்டுப்பாடு ஏற்பட்டதை அடுத்து போதியளவு மாவை எடுத்துவருவதற்காக இந்தக் கப்பல் அவசரமாக வாடகைக்கு அமர்த்தப்பட்டது.

வாடகைக்கு அமர்த்தப்பட்டபின் ஒரு தடவை மட்டுமே இக்கப்பல் திருமலையில் இருந்து பருத்தித்துறைக்கு மா ஏற்றி வந்தது.

இரண்டாவது தடவையாக இக்கப்பல் மாவை ஏற்றிக்கொண்டு பருத்தித்துறைக்கு வரவிருந்த சமயம் கொழும்பில் மாவுக்கு ஏற்பட்ட தட்டுப்பாட்டை அடுத்து திடீரென அது கொழும்புக்குத் திருப்பப்பட்டது.

(6 ஆம் பக்கம் பார்க்க)

## பாரிய படை நடவடிக்கை இப்போதைக்கு இடம்பெறா!

### பலமுனைகளில் சிறு தாக்குதல்கள்

கொழும்பு, செப். 27

வடபகுதி மீதான பாரிய இராணுவ நடவடிக்கைத் திட்டத்தை அரசு தற்போது ஒத்திவைத்திருப்பதாகத் தெரியவருகின்றது.

'முன்னேறிப்பாய்தல் — II' என்ற பெயரில் குடாநாட்டின் கேந்திரப் பகுதிகளைக் கைப்பற்றும் இராணுவ நடவடிக்கைக்கான பெரும் முன்தீர்வுகளை ஸ்ரீலங்கா அரசு செய்து வந்ததாகவும் —

மழைக்காலம் ஆரம்பிக்க முன்னர் இராணுவ நடவடிக்கையை மேற்கொண்டு மழைகாலத்திலும் தாக்குப்பிடிக்கக்

[6 ஆம் பக்கம் பார்க்க]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தரம் அற்ற ம.எண்ணெய் பாவனையாளர் பாதிப்பு

## அரச அதிபர் கொழும்பில் ஆராய்வார்

யாழ்ப்பாணம், செப். 27
யாழ். மாவட்ட மக்களுக்கு சமீபத்தில் வழங்கப்பட்ட மண்எண்ணெய் தரம் குறைந்தது என்று தெரிவிக்கப்படுகிறது.

மண்எண்ணெய் தரக் குறைவினால் விளக்குகள் சரியாக எரிவதில்லை. என்று பாவனையாளர்கள் தெரிவிக்கின்றனர்.

இது தொடர்பாக யாழ். அரசாங்க அதிபரிடமும் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

யாழ். மாவட்டத்துக்கு கப்பல்கள் மூலம் அனுப்பி வைக்கப்படும் உணவுப் பொருள்கள், மற்றும் மண்எண்ணெயின் தரத்தை தாம் கொழும்பில் நேரில் அவதானிக்கப் போவதாக யாழ். அரச அதிபர் கொழும்பு புறப்பட முன்னர் தெரிவித்தார்.

யாழ். மாவட்டத்துக்கு கப்பலில் வரும் மா, சீனி போன்ற உணவுப் பொருள்களின் தரமும் குறைவாக இருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

(இ-5)


## விஷேச அன்ரனா

ரூபவாஹினி, மட்றாஸ் நிகழ்ச்சிகளுக்கு அன்ரனா பொருத்துவதற்கும்,

வீடியோ கமரா, ரீ.வி, டெக், றேடியோக்கள், மணிக்கூடுகள் திருத்துவதற்கும்

**வீனஸ், டில்கா வாச் & றேடியோ வேக்ஸ்**

284, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

கிளை:
பஸ் நிலையம், சாவகச்சேரி.

Our Qualified Experienced
Technical & Tutorial Staff

**T. Thanabalasingam** B. Sc. (Ceylon)
Dip - in Electronic Engineering [Lond.]
[Specialist in V. C R. Service]

(சி/2243)


## நிறுத்தல் அளவை முத்திரையிடல்

யாழ்ப்பாணம், செப். 27
கரவெட்டி பிரதேசசபை தலைமைக் காரியாலயத்தில் வைத்து நாளை வியாழக் கிழமையும் நாளை மறுதினம் வெள்ளிக்கிழமையும் காலை 8-30 மணி முதல் நிறுத்தல் அளவை உபகரணங்களுக்கு முத்திரையிடப்படும் என யாழ். மாவட்ட நிறுத்தல் அளவைகள் பரிசோதகர் பகுதியினர் அறிவித்துள்ளனர்.

(இ-4)

## பேரணியில் கலந்து கொள்ள நிறுவனங்கள் கோரிக்கை

யாழ்ப்பாணம், செப். 27
அரச பயங்கரவாதத்துக்கு எதிராக 29ஆம் திகதி நடைபெறும் பேரணியில் சனசமூக நிலையங்களை முழுமையாகக் கலந்து கொள்ளுமாறு யாழ். மாவட்ட சனசமூக நிலையங்களின் சம்மேளனம் வேண்டிக் கொள்கிறது.

இதே வேளை, வலிகாமம் வடக்கு - கிழக்கு வடமராட்சி பிரதேச சென்ஜோன்ஸ் படை இப்பேரணியில் கலந்து கொள்ள வெள்ளிக்கிழமை காலை 8-30 மணியளவில் நாச்சிமார் கோயில் முன்றலில் கூடுமாறு அதன் அங்கத்தவர்களைக் கேட்டுள்ளது.

## புங்குடுதீவு வாசி கொலை: சந்தேக நபர் விடுதலை

1993 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 14 ஆம் திகதி சுவிஸ் சர்லாந்து நாட்டின் சூரிச் மாநிலத்தில் இடம்பெற்ற கொலை தொடர்பான வழக்கில் குற்றம் சாட்டப்பட்டிருந்த கோபால பிள்ளை இராஜகோபால் என்பவர் அந்நாட்டின் உயர் நீதி மன்றத்தால் பிணையில் விடுதலை செய்யப்பட்டுள்ளார்.

புங்குடுதீவு கிரிதரன் குமாரசாமி என்பவரின் கொலை தொடர்பான வழக்கு விசாரணை சூரிச் மாநில உயர் நீதி மன்றத்தில் விசாரிக்கப்பட்டு தீர்ப்பு வழங்கப்பட்டது.

தன்னைப் பாதுகாத்துக் கொள்ளவே கோபாலப் பிள்ளை ராஜகோபால் தற்காப்பு நடவடிக்கையில் ஈடுபட்டபோதுமேற்படி கொலை நடந்ததாக சாட்சியங்கள் மூலம் உறுதி செய்யப்பட்டது.

இதனை அடுத்து கோபால பிள்ளை ராஜகோபால் நிரபராதி என விடுதலை செய்யப்பட்டார்.

(ஒ-எ)

## விளையாட்டில் பங்குபற்ற தென்கொரியா சென்ற 6 பேர் அங்கு தலைமறைவு

கொழும்பு, செப் 27
தென் கொரியாவில் நடந்த சர்வதேச கரப்பந்தாட்டச் சுற்றுப்போட்டியில் கலந்து கொண்ட இலங்கைக் குழுவைச் சேர்ந்த 6 பேர் காணாமற்போய்விட்டதாக அறிவிக்கப்பட்டுள்ளது

தலைநகர் சியோலில் நடைபெற்ற இப்போட்டியில் இலங்கையில் இருந்து 17 பேர் கலந்துகொண்டனர்.

கடந்த 20 ஆம் திகதியில் இருந்து இவர்களில் 6 பேர் காணாமற்போயுள்ளதாக சியோலில் உள்ள இலங்கைத் தூதரகம் அறிவித்துள்ளது.

[ஐ-8]

## பலியான விமானிகள் ரூ. 1 கோடிக்கு காப்புறுதி செய்யப்பட்டிருந்தனராம்

கொழும்பு, செப். 27
கடலுக்குள் வீழ்ந்த "அன்ரனோவ்" விமானத்தின் விமானிகளுக்கு விமானப்படையினர் ஒரு கோடி ரூபாவுக்கு காப்புறுதி செய்திருந்தனர் என "லக்பிம" சிங்கள வார இதழ் தெரிவித்துள்ளது.

போர் விமானங்கள் காப்புறுதி செய்யப்படுவது வழமையில்லையாதலால் 'அன்ரனோவ்' விமானம் காப்புறுதி செய்யப்பட்டிருக்கவில்லை என்றும் தெரிவிக்கப்பட்டது.

விமானத்தில் பயணம் செய்த சிப்பாய்கள் ஒவ்வொருவரும் தலா ஒருலட்சம் ரூபாவுக்கு காப்புறுதி செய்யப்பட்டிருந்தனர்.

விமானத்தில் பயணம் செய்த 75 சிப்பாய்களும் இறந்ததாக அவர்கள் பணியாற்றிய பிரிவுகள் இராணுவத் தலைமையகத்திற்கும் அவர்களது உறவினர்களுக்கும் அறிவித்த போதிலும், குறித்த படையினர் இராணுவ நடவடிக்கைகளின் போது இறந்ததாக இராணுவத் தலைமையகத்தினால் இதுவரை அறிவிக்கப்படவில்லை. இதனால் இறந்தவர்களுக்கான நஷ்டஈட்டை வழங்குவதில் தாமதம் ஏற்பட்டுள்ளதாக "லக்பிம" மேலும் தெரிவித்துள்ளது.

[உ-10]

## ஊர்காப்பு கழகங்கள் பற்றிய கூட்டம்

யாழ்ப்பாணம், செப். 27
விடுதலைப்புலிகளின் அரசியல் துறையால் கிராமசேவையாளர் பிரிவு ரீதியாக அமைக்கப்பட்டுள்ள ஊர்காப்புக் கழகங்களின் செயற்பாட்டு விளக்கக் கூட்டம் கோப்பாய் வட்டத்தில் இன்று நடைபெறவுள்ளது.

உரும்பராய் வடக்கு கிழக்கு தெற்கு. மேற்கு கிராமசேவகர் பிரிவு மக்களுக்கான இக் கூட்டம் இன்று இரவு 7 மணிக்கு உரும்பராய் சைவத் தமிழ் வித்தியாலயத்தில் நடைபெறும்.

இப் பகுதிகளைச் சேர்ந்த சனசமூக நலனோம்பு மூலவள நிலையங்களின் நிர்வாக உறுப்பினர்களையும், மக்களையும் அதில் கலந்து கொள்ளுமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

[ஐ]

## குழாய் நீர் விநியோகம் சீரில்லை என முறைப்பாடு

அளவெட்டி, செப். 27
துணைவி, சங்கரத்தைப் பகுதிகளுக்கான குழாய் நீர் விநியோகம் சீராக நடைபெறுவதில்லை என்று பொது மக்கள் புகார் செய்கின்றனர்.

முன்னர் காலையில் 6-00 மணி முதல் 6-30 மணிவரையும் —

மாலையில் 5-00 மணி முதல் 5-45 மணி வரையும் நீர் விநியோகிக்கப்படுவது வழக்கம்.

தற்போது காலை 6-15 மணியுடன் நீர் விநியோகம் நிறுத்தப்படுகிறது எனவும் —

பின்னர் மாலையில் 4-30 மணி தொடக்கம் 5-15 மணி வரை வழங்கப்படுகிறது எனவும் தெரிவிக்கப்படுகிறது

## அந்தியேட்டி பின்போடப்பட்டுள்ளது

28-8-95 திங்கட்கிழமை சிவபதம் எய்திய எங்கள் தாயார் மண்டைதீவு

திருமதி
**கணபதிப்பிள்ளை தில்லைவனம்**

அவர்களின் அந்தியேட்டி, வீட்டுக்கிரியைகள் தவிர்க்க முடியாத காரணத்தால் குறிப்பிட்ட திகதிகளில் நடைபெறாது பின் போடப்பட்டுள்ளது. நடைபெறும் திகதி பின்னர் அறிவிக்கப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறோம்.


இங்ஙனம்
மக்கள்

கு. க. நடராஜன்
கு. க. பரமானந்தம்

66/1, பருத்தித்துறை வீதி,
ஆரியகுளம் சந்திக்கு அருகில்,
யாழ்ப்பாணம்.

(38700)

## 2-ம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம்: 04 — 06 — 1917

மறைவு: 17 — 09 — 1993

**அமரர் சி. கந்தவனம்**
(வேலணை மேற்கு)

மறந்தும் மறையாத எம் அன்புத் தெய்வமே நீங்கள் எமை பிரிந்து ஆண்டு இரண்டு சென்றிடினும் உங்கள் நினைவுகள் என்றுமே எங்களுடன் கலந்தே இருக்கும். உங்கள் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கிறோம்.

மனைவி, மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

சீனியர் லேன்,
யாழ்ப்பாணம்.

(38702)


**A/L 96 DAY CLASS**
[வர்த்தகப் பிரிவு]
[பாடசாலை செல்லாத மாணவர்கட்குரியது]
ஆரம்பம்:- 28.9.95
வியாழன் — மு.ப. 8 00
எமது வழமையான ஆசிரியர்கள்
**SHAMROCK**
யாழ். சுண்டுக்குளி.
[38701]


எங்களது இதய அறைகளிலே உங்களது பசுமை நினைவுகள் குடிகொண்ட

## 31 வது நிறைவு நாள்

திருமதி
**இராணி சத்தியதாசன் B. A**
(பட்டதாரி ஆசிரியை)

மண்ணுக்கு முத்தாக; 04 - 02 - 1948
விண்ணுக்குச் சொத்தாக: 28 - 08 - 1995

எங்கள் கண்ணுக்குள் மணியாக — உடலுக்குள் உயிராக — பாதைக்கு ஒளியாக வாழ்ந்த தெய்வமே!! நீங்கள் அகன்றதால் அனைத்துமே அகன்றுவிட்டது எம்மைவிட்டு.

கணவன், பிள்ளைகள்,
உறவினர்

தற்காலிக முகவரி; -
3 ஆம் கட்டை
ஆனைக்கோட்டை,

(38704)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாழ்ப்பாணம் நல்லூர் இராஜவீதி

யாழ். மாவட்டத்துக்கு ஒதுக்கப்பட்ட

# ரூ. 75 லட்சத்தில் ஒரு பகுதியாவது பயன்படுத்தப்படாத நிலைமை!

யாழ்ப்பாணம், செப். 27
யாழ்ப்பாண மாவட்டத்துக்கென இவ்வாண்டு பன்முக வரவு செலவுத்திட்டத்தின் கீழ் ஸ்ரீலங்கா அரசால் ஒதுக்கப்பட்ட எழுபத்தைந்து லட்சம் ரூபாவில் ஒரு பகுதியாவது இதுவரை பயன்படுத்தப்படவில்லை.

யாழ். மாவட்ட பிரதித் திட்டமிடல் பணிப்பாளர் வி. செ. சுவாமிநாதன் இதனைத் தெரிவித்தார்.

யாழ். பல்கலைக்கழக முகாமைத்துவ மாணவர் மன்ற ஆதரவில் அண்மையில் நடைபெற்ற கருத்தரங்கொன்றில் கேள்வி நேரத்தின் போது பதில் அளிக்கும் போது இதனைத் தெரிவித்தார்.

இந் நிதியை பயன்படுத்தும் வகையில் வேலைத் திட்டங்களை மேற்கொள்வதற்குரிய மூலப்பொருள்களுக்கு யாழ். மாவட்டத்தில் பெரும் தட்டுப்பாடு நிலவுவதனால் இந்நிலை தோன்றியுள்ளது.

பொருண்மியத் தடைகளால் அபிவிருத்தி வேலைகளுக்குத் தேவையான சிமெந்து, உலோகப் பொருள்கள் எரிபொருள் வகைகள் என்பன இங்கே கிடைப்பதில்லை.

பொறியியலாளர்கள் தொழில்நுட்பவியலாளர்கள் என்போருக்கும் பற்றாக்குறை நிலவுகிறது.

போக்குவரத்து நெருக்கடிகளால் அதிகாரிகளுக்குரிய போக்குவரத்து வசதிகள் கூடச் சரிவரக் கிடைப்பதில்லை.

இதற்கான செலவுகளும் அதிகம் தேவைப்படுகிறது.

சமாதான காலங்களில் செயற்படுத்தப்படும் வேலைத் திட்டங்கள்போல தற்போதும் வேலைத் திட்டங்கள் தயாரிக்கப்பட்டு நடைமுறைப்படுத்தப்படவேண்டும் என அரசாங்கம் எதிர்பார்க்கிறது.

முன்னர் யாழ்ப்பாணத்திலிருந்து ஓர் அதிகாரி வவுனியா செல்வதாக இருந்தால் நூறு ரூபாவிலும் குறைவாகவே தேவைப்படும்.

தற்பொழுது பல மடங்கு பணம் தேவைப்படுகிறது எனவும் அவர் சுட்டிக்காட்டினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், எமது பிரதேசத்துக்கு வேண்டிய முன்னுரிமைத் திட்டங்களுக்கும் அரசாங்கத்தின் முன்னுரிமை வழங்கும் திட்டங்களுக்கும் இடையில் ஒற்றுமை இல்லை. இவ்வாண்டின் டிசம்பர் மாதத்துக்கு முன்பாக பயன்படுத்தப்பட வேண்டிய இந்நிதியில் ஒரு பங்குகூட பயன்படுத்தப்படாத அவல நிலை இன்று வரை நிலவுகிறது என்றார். (இ-5)

## சித்த வைத்திய மாநாடு

சித்த வைத்தியக் கூட்டுறவுச் சங்கத்தினால் ஏற்பாடு செய்யப்பட்ட சித்த வைத்திய மாநாடு இன்று புதன்கிழமை காலை 10 மணிக்கு யாழ். ஆஸ்பத்திரி வீதியிலுள்ள கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் அலுவலகத்தில் நடைபெறும்.

கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளரும் சித்த வைத்தியக் கூட்டுறவுச் சங்கத்தின் தலைவருமான திரு தி. சபாரத்தினம் தலைமையில் மாநாடு நடைபெறும்.

இம் மாநாட்டில் "21ஆம் நூற்றாண்டில் உலக மக்களை காப்பாற்ற சித்த மருத்துவம் எவ்வாறு உதவப் போகின்றது" என்ற தலைப்பில் ஆராய்ச்சிக் கட்டுரைகளை வைத்திய கலாநிதிகள் கு. ஸ்ரீகணநாதன், திருமதி. தி. சொர்ணரஞ்சிதம், வைத்தியஜோதி திருமதி கோ. திலகவதி, வைத்தியப் பேரறிஞர் க. பாலசுப்பிரமணியம் வைத்தியாஆச்சாரி இ.வ. கந்தசாமி ஆகியோர் சமர்ப்பிக்கவுள்ளனர். (இ-4)

## சைக்கிளில் சென்றவரை யானை தாக்கியது

வேலையை முடித்துக் கொண்டு சைக்கிளில் வீடு சென்று கொண்டிருந்தவர் யானையினால் தாக்கப்பட்டுப் படுகாயமடைந்தார்.

கனகராயன்குளம் பகுதியில் இச்சம்பவம் இடம்பெற்றது.

மூன்வைத்தீவு. நெடுங்கேணியைச் சேர்ந்த கந்தையா கெங்காதரன் (வயது 60) என்பவரே படுகாயமடைந்தவராவார்.

சைக்கிளில் சென்று கொண்டிருந்த வேளை பற்றை மறைவில் வந்த யானை துதிக்கையினால் அடித்து வீழ்த்தி காலால் உதைத்து விட்டுச் சென்றதாகத் தெரிவிக்கப்பட்டது.

படுகாயமடைந்தவர் கிளிநொச்சி ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டு அங்கிருந்து யாழ். ஆஸ்பத்திரிக்கு மாற்றப்பட்டுள்ளார். (இ-15)

## போரில் இறந்த சிப்பாயின் சடலம்

### பெற்றோர் ஏமாற்றம்

மத்துகம, செப் 27
போரில் மரணமடைந்த மகனின் உடலை பெற்றோர் எதிர்பார்த்து காத்திருந்தனர்.

ஆனால் வந்ததோ இன்னொருவருடைய உடல்.

பதுரெலியா என்ற இடத்தில் இது நிகழ்ந்தது. சம்பவம் பற்றி அறிய வருவதாவது:

பொலன்றுவை, கல்கண்ட இராணுவ முகாமைச் சேர்ந்த தமது மகன் போரில் இறந்து விட்டார் எனவும் விரைவில் அவருடைய உடல் அவர்களுக்கு அனுப்பி வைக்கப்படும். எனவும் பதுரெலியாவைச் சேர்ந்த பெற்றோருக்குத் தகவல் கிடைத்தது.

பெற்றோர் மரண வீட்டை ஒழுங்கு செய்து விட்டு மகனின் உடலுக்குக் காத்திருந்தார்கள்.

ராணுவ அதிகாரி ஒருவர் உடலை எடுத்து வந்தார். பெற்றோர் பிரேதப் பெட்டியைத் திறந்து பார்த்தார்கள். அது தமது மகனுடைய உடல் அல்ல, வேறு ஒருவருடையது என்பதை அவர்கள் கண்டு கொண்டார்கள்.

ராணுவ அதிகாரி அந்த உடலை பின்னர் எடுத்துச் சென்றார். (இ-க)

## சில தினங்களில் விமானம் மீட்கப்பட்டு விடுமாம்!

கொழும்பு செப். 27
கடலில் விழுந்த அவ்ரோ வோவ் விமானத்தை இன்னும் ஒரு சில தினங்களில் வெளியே எடுக்க முடியுமென தாம் நம்புவதாக "மாஸ்டர் டைவேர்ஸ்" நிறுவனத்தின் தலைவர் ஆரியசீல விக்கிரமநாயக்கா தெரிவித்துள்ளார்.

விமானம் முழுவடிவத்தில் அல்லது உடைந்த நிலையில் உள்ளதாக நம்பப்படுகிறது. விமானம் விழுந்த இடத்தை நாம் சரியாக கண்டறிந்துள்ளோம். அந்த இடத்திலிருந்து விமானத்தை அல்லது விமானத்தின் உடைந்த பாகங்களை வெளியே எடுக்கும் பணியை ஆரம்பிக்கவுள்ளோம்— என அந்த நிறுவனத்தின் பேச்சாளர் தெரிவித்தார்.

ஜா-எலவிலிருந்து 25 மைல் தூரத்தில் கடலில் சுமார் ஒரு சதுரமைலில் பரப்பளவில் சுமார் 4000 அடி ஆழத்தில் விமானம் இருப்பதாக தெரிவிக்கப்படுகிறது.

சில ஆண்டுகளுக்கு முன்னர் "கண்டுல" என்னும் தரையிறக்கக் கலம் கலவில் கடற்பகுதியில் மூழ்கிய போது இந்த நிறுவனத்தினரே அதைக்கட்டி கொழும்புக்கு இழுத்துச் சென்றனர் என்பது குறிப்பிடத்தக்கது. (உ-10)

## புலிகளின் குரல் வானொலியில்

**27 - 09 - 1995**

**புதன் இரவு**

- ★ 8-02 — தியாகி லெப். கேணல் திலீபனின் 8ஆம் ஆண்டு நினைவாக நடைபெற்ற நிகழ்ச்சிகளின் தொகுப்பு
- ★ 8-30 — செய்திகள்
- ★ 8-40 — நாடகம்— நா. யோகேந்திரநாதன் எழுதிய "நன்கொடை"

**28 - 09 - 1995**

**வியாழன் காலை**

- ★ 7-02 — மாவீரவணக்கம்
- ★ 7-15 — விடுதலைக் கீதங்கள்
- ★ 7-30 — செய்திகள்
- ★ 7-35 — பத்திரிகைச் செய்திகள்
- ★ 8-00 மணி வரை விடுதலைக் கீதங்கள் நிகழ்ச்சியின் தொடர்ச்சி

## தமிழீழ வானொலியில்

**புதன் மாலை**

- ★ 5-01 — சிந்தனைச் சிதறல்
- ★ 5-02 — எழுச்சிகீதம்
- ★ 5-10 — புதியவை
- ★ 5-15 — படப்பாடல்கள்
- ★ 5-30 — அறிவூற்று
- ★ 6-00 — சிந்தனைக்குச் சில விநாடிகள்
- ★ 6-02 — உங்கள் தெரிவு
- ★ 6-10 — செய்திகள்
- ★ 6-15 — விளையாட்டுச் செய்திகள்
- ★ 6-20 உங்கள் தெரிவு நிகழ்ச்சியின் தொடர்ச்சி

## றோம் நகரிலும் பிள்ளையார் அதிசயம்

றோம், செப். 27
இந்துக்கள் அதிகமாக வாழும் பகுதிகளில் மட்டுமல்லாமல், றோமன் கத்தோலிக்க கிறீஸ்தவர்கள் மிகப் பெரும்பான்மையினராக வசிக்கும் இத்தாலியிலும் பிள்ளையார் பால் அருந்தும் அதிசயம் இடம் பெற்றுள்ளது என வெரித்தாஸ் வானொலி தெரிவித்தது.

இத்தாலியின் தலைநகர் றோமில் இந்தியப் பொருள்கள் விற்பனை நிலையம் ஒன்று இருக்கிறது. அங்கு பிள்ளையாரின் சிலை ஒன்றும் வைக்கப்பட்டுள்ளது.

அந்த நிறுவனத்தின் உரிமையாளரான இந்தியர் பிள்ளையாரின் உருவச் சிலைக்கு ஒரு தேக்கரண்டியில் பாலை அருந்தக் கொடுத்த போது, அந்த பிள்ளையார் சிலை பாலை அருந்தியது என வெரித்தாஸ் தெரிவித்தது.

இத்தாலியில் உள்ள கிறீஸ்தவ ஆலயங்களில், கன்னி மரியாளின் உருவச் சிலைகளில் இருந்து காலத்திற்குக் காலம் கண்ணீர் அல்லது இரத்தம் சிந்துவது வழக்கம்.

அண்மையில் அங்குள்ள கன்னி மரியாளின் சிலையில் இருந்து இரத்தம் கசிவதை பல செய்தி நிறுவனங்கள், புகைப்படத்துடன் வெளியிட்டிருந்தன என்றும் வெரித்தாஸ் தெரிவித்தது. (இ-ஏ)

## குண்டு வீச்சின் பின்னர் பார்வை இழந்த சிறுவன்!

யாழ்ப்பாணம் செப். 27
நவாலி சென்பீற்றர்ஸ் தேவாலயத்தின் மீது ஸ்ரீலங்கா வான்படை விமானங்கள் நடத்திய தாக்குதலிலிருந்து தப்பிய சிறுவன் ஒருவருக்கு கண் ஒன்றின் பார்வை இல்லாமற் போய் விட்டது.

சங்கானையைச் சேர்ந்த பெரியதம்பி சுதாகரன் (வயது 15) என்ற இச்சிறுவன் யாழ் போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இச் சிறுவனின் ஐந்து உறவினர்கள் இத் தாக்குதல் சம்பவத்தில் உயிரிழந்து விட்டனர். இச் சிறுவன் அதிர்ஷ்டவசமாக மரம் ஒன்றின் கீழ் பாதுகாப்புத்தேடி காயங்கள் எதுவும் இன்றித் தப்பிக் கொண்டார்.

குண்டு வீச்சின் பின்னர் ஒரு கண்ணில் உறுத்தல், வலி என்பன ஏற்படத்தொடங்கின, தொடர்ந்து கண் பார்வை மங்கத் தொடங்கியது.

குண்டு வீச்சுக் காரணமாக தோன்றிய இரசாயனப் பொருட்கள் ஏதும் கண்ணைத் தாக்கியிருக்கலாம் என மருத்துவர்கள் சந்தேகிப்பதாக சிறுவனின் சகோதரி தெரிவித்தார்.

தனது சகோதரனின் கண் பார்வை மீளக் கிடைக்க வேண்டுமெனில் தானமாக கண் தேவைப்படுவதாகவும் அவர் கூறினார். (இ-5)

சங்கானை, சண்டிலிப்பாயில்

## தேசிய பாதுகாப்பு நிதி

யாழ்ப்பாணம், செப். 27
சங்கானை சண்டிலிப்பாய் வட்டங்களைச் சேர்ந்தவர்களிடமிருந்து இன்று 27ஆம் திகதி புதன்கிழமை தேசிய பாதுகாப்பு நிதி பின்வரும் கிராமசேவகர் பிரிவுகளில் பெற்றுக் கொள்ளப்படும் என்று அறிவிக்கப்படுகிறது.

சிவப்பிரகாச மகாவித்தியாலயத்தில் இன்று காலை 8-30 — 12-00 மணி வரை சங்கானை மத்தி, சங்கானை மேற்கு பிரிவுகளைச் சேர்ந்தவர்களும் பிற்பகல் 1-5 மணி வரை சங்கானை கிழக்கு, சங்கானை தெற்கு பிரிவுகளைச் சேர்ந்தவர்களும்—,

நவாலி றோ.க.த.க. பாடசாலையில் இன்று காலை 8-30 — 12-00 மணி வரை நவாலி வடக்கு, நவாலி கிழக்கு பிரிவுகளைச் சேர்ந்தவர்களும், பிற்பகல் 1-5 மணி வரை நவாலி தெற்குப் பிரிவைச் சேர்ந்தவர்களும் தேசிய பாதுகாப்பு நிதியைச் செலுத்துமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறது. (க)

## தீவுப்பகுதி ஆசிரியர்கள் பலர் திரும்பிச் செல்ல வழியின்றி தவிப்பு

கொழும்பு, செப். 27
ஜி. சீ. ஈ. உயர்தரப் பரீட்சை விடைத்தாள்களைத் திருத்தவென தீவுப்பகுதிகளில் இருந்து அழைக்கப்பட்ட ஆசிரியர்கள் ஐவர் மீண்டும் தங்கள் பாடசாலைகளுக்குத் திரும்பமுடியாத நிலையில் திருகோணமலையில் தங்கி உள்ளனர்.

இவர்கள் [illegible] கொழும்பு சென்றிருந்தனர்.

விடைத்தாள்களை திருத்தச் சென்ற ஆசிரியர்களை விட வேறு கடமைகளுக்காகச் சென்ற மேலும் 12 ஆசிரியர்கள் பிரயாண வசதியின்றி திருகோணமலை, வவுனியா, கொழும்பு ஆகிய இடங்களில் தங்கி உள்ளனர். இவர்கள் அனைவரும் நெடுந்தீவு, அனலைதீவு, ஊர்காவற்துறை பகுதிகளைச் சேர்ந்தவர்கள்.

திருகோணமலையில் தங்கி உள்ள ஆசிரியர்கள் தற்காலிகமாக அங்குள்ள பாடசாலைகளில் ஆசிரியர்களாக இணைக்கப்பட்டுள்ளனர்.

தீவுப்பகுதிகளுக்குப் பொறுப்பான பிரதிக் கல்விப் பணிப்பாளரும் தற்போது பிரயாண வசதிகள் இன்றி கொழும்பில் தரித்து நிற்கிறார். தீவுப் பகுதிகளிலிருந்து ஜி. சீ. ஈ. உயர்தரப் பரீட்சைக்குத் தோற்றியோர் எண்ணிக்கை 120 ஆகும். (இ-10)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ்சிறு விளம்பரம்

### நாய்க்குட்டி விற்பனை

45 நாட்கள் நிறைவடைந்த சுத்த இன பொமரேனியன் நாய்க்குட்டிகள் பூச்சி நீக்கப்பட்ட நிலையில் விற்பனைக்குண்டு. தொடர்பு: திருமதி வைத்தீஸ்வரன், மானிப்பாய் ஆண்கள் இந்துக் கல்லூரியின் முன். [38688]

### நவராத்திரிப் பாமாலை

நவராத்திரி தோத்திரப் பாமாலை தொகுப்பு: வித்துவான் சி. குமாரசாமி B. A., வெளியீடு பூபாலசிங்கம் புத்தக நிலையம், யாழ்ப்பாணம். [சி-2350]

### தேவை

பாவித்த பிறேம் கண்ணாடிகள் வாங்கப்படும். தொடர்பு கொள்ளவும். சிவன் கண்ணாடி நிலையம், இல. 382, கே. கே. எஸ். றோட், யாழ்ப்பாணம் (சிவன் கோவில் முன்பாக). [38673]

### மணப்பெண் தேவை

படித்த குடும்பப்பெற்றோர் யாழ்ப்பாணத்தில் வெளிநாட்டு ஸ்தாபனத்தில் உத்தியோகம் பார்க்கும் 35 வயது, 5 அடி 8 அங்., விசாகம், 7இல் செவ்வாய் மகனுக்கு 30 வயதுக்கு உட்பட்ட அழகிய பெண்ணைத் தேடுகிறார்கள். கடிதமூலம் தொடர்பு: இல. 852, மே/பா உதயன், யாழ்ப்பாணம். [38684]

### மணமகன் தேவை

வசதியான குடும்பத்தைச் சேர்ந்த, 27 வயதுடைய, குற்றமற்ற, அழகிய, படித்த மணமகளுக்கு உயர் பதவியில் உள்ள நற்குணமுள்ள மணமகன் தேவை. கடித மூலம் தொடர்பு கொள்ளவும். இல. 851, மே/பா உதயன், யாழ்ப்பாணம். [38683]

### சோதிடம்

ஜாதகக் குறிப்பு எழுத, பலன் பார்க்க கல்வி, திருமணம், தொழில், எதிர்காலப் பலன் விவாகப் பிரச்சினைகள், செவ்வாய், ராகு தோசம் நீங்க ஜாதகக் குறிப்புடன் வரவும். ஸ்ரீமாவை விநாயகர் சோதிட நிலையம், இல. 361, பருத்தித்துறை வீதி, நல்லூர். (38696)

### சந்திக்கவும்

அலுக்கை, அளவெட்டியைச் சேர்ந்தவரும், மல்லாகம் கிருபா படப்பிடிப்பாளரும் ஆகியவர் உடன் என்னை பின்வரும் விலாசத்தில் சந்திக்கவும்.

தா. சின்னத்துரை.
C/o K சதிரவேலு,
(Dr. மகேசன் வீட்டுக்கு அருகில்)
அம்பலவாணர் வீதி,
உடுவில், சுன்னாகம்.
(38692)

## வடமராட்சியில் மீண்டும் வழமை நிலை திரும்புகிறது

யாழ்ப்பாணம், செப். 27

வடமராட்சிப் பகுதியில் 25 ஆம் திகதியும் இரண்டாவது நாளாக அமைதி நிலவியது.

மாஹோகப்பக் துறைமுகத்திற்கு வந்து பொருள்களை இறக்கும் பணியில் ஈடுபட்டிருந்ததைத் தொடர்ந்து பருத்தித்துறைப் பகுதியில் ஓரளவு வழமைநிலை திரும்பியிருந்தது.

சந்தைகள் கடைகள் சில திறந்து வியாபாரம் மேற்கொள்ளப்பட்டது.

மக்கள் நடமாட்டமும் சிறிதளவில் காணப்பட்டது.

மக்கள் தம் இருப்பிடங்களுக்குச் சென்று திரும்பிக் கொண்டிருந்ததை காணக் கூடியதாக இருந்தது. சிலர் தம்வீடுகளில் தங்கினர்.

எனினும் வழமையான கலகலப்பை அங்கு காணமுடியவில்லை.

(க-15)

## 3ஆம் ஆண்டு நினைவலைகள்

மலர்வு: 12 — 08 — 1940



உதிர்வு: 28 — 09 — 1992

### அமரர் ச. பாலசிங்கம் (பாலா)

(முன்னாள் உதயன் ஊழியர், முன்னாள் வார்க்கஸ் ஊழியர்)

திதி: 27 — 09 — 1995

அணையாத ஒளிவிளக்கே
அன்பாய் உழைத்த தந்தையே!
சென்றவழி எதுவோ
செப்பாமல் போனாயே
எம் இதய ஜோதியே
எந்நாளும் எங்களுடன்
வாழ்ந்திடுவீர்!

உங்கள் துயரில் வாடும்;
மனைவி, பிள்ளைகள், மருமக்கள்,
பேர்த்தி, உறவினர்கள்.

344/1, மூன்றாம் குறுக்குத்தெரு,
கொழும்புத்துறை. [38693]

எங்கள் பாசமிகு தந்தையின்

## 2ஆம் ஆண்டு நினைவஞ்சலி



### அமரர் தம்பையா சதாசிவம்

(முன்னாள் கொழும்பு/பம்பலப்பிட்டி இந்துக் கல்லூரி அதிபர், முன்னாள் கொழும்புத்துறை - மேற்கு ஐக்கிய நாணய சங்கத் தலைவர்)

அன்னை மடியில்: 04 - 11 - 1917
அமலன் அடியில்: 27 - 09 - 1993

திதி: 05 - 10 - 1995

ஆண்டு இரண்டு சென்றதுவோ அப்பாவை நாம் பிரிந்து
ஆண்டு பல சென்றிடினும் ஆறாது எம் துயரம்
பாசப் பிணைப்புடனே பரவசமாய் நாம் வாழ்ந்தோம்
பாசக் கயிறு கொண்டு பறித்துச் சென்றான் பாவியமன்
நீசன் எமைப்பிரித்து நிலை குலைந்து நிற்கையிலே
நீதிதேவனும் தான் நித்திரையும் கொண்டானோ?
நெஞ்சைப் பிழக்குதையா நின் பிரிவு எங்களைத்தான்
தஞ்சமெமக்காருமில்லை தலையெடுக்க முடியவில்லை
கண்ணின் மணிபோலக் கருத்துடனே காத்த அப்பா
கண்கலங்க எம்மைவிட்டுக் கடுகதியாய்ப் போனதென்ன?
அல்லல் தான் என்னவென்று அறியாது எம்மை வளர்த்தீர்
அல்லல் படவிட்டு அமைதியாய்ச் சென்றதென்ன?
கல்விக் களஞ்சியமே கவின்கலையில் வல்லவரே
சொல்லுக்கு அரிச்சந்திரனே சொல் மறந்து சென்றதென்ன?
கண்ணில் உறக்கமில்லை கருத்தில் தெளிவுமில்லை
மண்ணில் மகிழ்ச்சியில்லை மன்னவரே நின் பிரிவால்
காணக் கண்தேடுதப்பா கதை பேச ஆசை அப்பா
காணுவதும் பேசுவதும் கனவாகிப் போனதப்பா
''ஈசன் செயல்'' என்று சொல்லி இறைவழியே வாழ்ந்தவரே
ஈசன் பதமடைய இறையருளை வேண்டுகின்றோம்.

அச்சாப்பா வையத்து வாழ்வாங்கு வாழ்ந்தீர்கள். எங்களுக்கும் தாயாய், தந்தையாய், நல்லாசானாய் இருந்து வழிகாட்டினீர்கள் அவ்வழியே நாம் நடப்போம். நீங்கள் எங்கள் கண்கண்ட தெய்வம் அப்பா என்றும் எங்களுக்கு உற்ற துணையாய் இருந்து வழிநடத்துங்கள்.

உங்கள் பிரிவால் துயருறும்;
அன்பு மனைவி, மகள், சுற்றத்தவர்கள்.

தகவல்;
திருமதி தெ. சதாசிவம்
இல 24. புளிக்கக்குளம் வீதி,
கொழும்புத்துறை - மேற்கு,
யாழ்ப்பாணம். [38666]

## நெஞ்சத்தில் நீங்காத 31-ம் நாள் நினைவலைகள்



பெற்றவர் மனம் மகிழ: 01 - 04 - 1924

உற்றவர் மனங்கலங்க: 28 - 08 - 1995

### அமரர் சின்னையா சண்முகம்

(ஓய்வு பெற்ற கணக்காய்வாளர், புகையிரதத் திணைக்களம்)

ஒரு திங்கள் ஓடிமறைந்தது உலகை நீ விட்டகன்று
பல்லாண்டு சென்றாலும் மறப்போமா நின்முகத்தை
அன்பால் அரவணைத்து பண்பாய் எமை வளர்த்தாய்
வீட்டின் தலைவனாய் விளங்கி வளஞ் சேர்த்தாய்
பாசமறுத்து பரமனடி சேர்ந்ததேனோ?
நேசம் மறப்போமா உலகம் நிலைக்கு மட்டும்
இறைவனடி இணைந்து நிறைவுடன் நீ வாழ
நிறைமனதாய் இறைஞ்சுகிறோம் நிமலன் தாள் -
வணங்கி

27 - 09 - 95 இன்று அன்னாரது இல்லத்தில் நடைபெறும் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும், மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

அன்னாரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கும்;
மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்,
சகோதரி,

47, அத்தியடி புதுவீதி,
யாழ்ப்பாணம். (38667)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
293/3 நாவலர் வீதி,
யாழ்ப்பாணம்.

## பேரணிக்குத் திரள்வீர்!

தமிழீழ விடுதலைப் புலிகளைப் பலவீனப்படுத்துவதற்கான போர் என்று கூறிக்கொண்டு, சந்திரிகா அரசாங்கம் தமிழர் தாயகத்தில் இராணுவ நடவடிக்கைகளைத் தீவிரமாக முடுக்கி விட்டிருக்கிறது. ஆனால் இந்த இராணுவத் தாக்குதலின்போது அரசு நாளாந்தம் அப்பாவித் தமிழ்ப் பொதுமக்களையே இனப்படுகொலை செய்துவருகிறது.

யாழ்ப்பாணக்குடாநாட்டில் கடந்த மூன்று மாதங்களில் மட்டும் — ஜூலையில் ''முன்னேறிப் பாய்தல்'' நடவடிக்கை தொடங்கப்பட்ட பின்னர் — இதுவரை ஆகக் குறைந்தது நானூறு பொதுமக்கள் இனப்படுகொலை செய்யப்பட்டிருக்கிறார்கள். ஆகக் குறைந்தது ஆயிரம் பேர் படுகாயம் அடைந்திருக்கிறார்கள். இருநூறுக்கும் மேற்பட்டோர் உடல் ஊனமுற்று விட்டார்கள்.

நவாலித் தேவாலயத்தின் மீதும், நாகர்கோவில் மகா வித்தியாலயத்தின் மீதும் அரச படைகள் நடத்திய கொன்று குவிப்புகளின்போது பெரும் எண்ணிக்கையான இளவயதினரே மாண்டிருக்கிறார்கள்.

கடவுள் ஆலயங்களும் கல்வி ஆலயங்களும், மனித வாழ்வின் பிரதான சமூக மையங்கள். அவற்றின் மீது குண்டு வீசி, இனப்படுகொலை செய்யும் அக்கிரமம் மனித உரிமை மீறல்களில் கொடியதினும் கொடியது.

மனித உயிர்களை, தனது பிரசைகள் என்று சொந்தம் கொண்டாடும் மக்களின் உயிர்களை, ஒரு சில விநாடியில் பதைக்கப் பதைக்கக் குடிக்கும் அரசு —

தான் அவ்வாறு செய்யவில்லை என்று தனது தலையிலேயே அடித்துப் பொய்ச் சத்தியமும் வேறு செய்துகொள்கிறது!

தனது பொய்ச் சத்தியங்களை பத்திரிகைகளும், வெளிநாட்டுச் செய்தி ஏஜன்சிகளும் பொய்ப்பித்து, உலக நாடுகளில் தனது குற்றத்தை அம்பலப்படுத்துவதைத் தடுப்பதற்காக செய்தித் தணிக்கையையும் சந்திரிகா அரசு கொண்டு வந்திருக்கிறது.

இதனை முறியடித்தாக வேண்டும். தமிழர் தாயகத்தில் மேற்கொள்ளப்படும் இனப்படுகொலைகளை வெளிப்படுத்துவது மிகவும் பிரதான தேவையாகும். இனப்படுகொலைகளுக்கு எதிராக மக்கள் திரண்டு நடத்தும் கண்டனப் பேரணிகள் அந்த இலக்கை அடைவதற்குப் பெரிதும் உதவும்.

ஆகையால், நாளை மறுதினம் யாழ். மாவட்ட வெகுசன அமைப்புகளின் ஒன்றியம் நடத்தவுள்ள ஆர்ப்பாட்டப் பேரணியை மிகப் பிரமாண்டமான முறையில் நடத்த வேண்டும். எவ்வளவுக்கு எவ்வளவு அதிக எண்ணிக்கையானோர் இதில் கலந்து கொள்கிறார்களோ, அவ்வளவுக்கு அவ்வளவு தாக்கமுடையதாகவும், பலமுள்ளதாகவும் பயனுள்ளதாகவும் மாறும். ஸ்ரீலங்கா அரசின் குட்டை வெளிநாடுகளுக்கு அம்பலப் படுத்தும்.

எனவே வெள்ளிக்கிழமை நடைபெறவுள்ள பேரணியில் எவ்வொருவரும் தவறாது கலந்து கொண்டு அதனை மிகப் பிரமாண்டமானதாக்க வேண்டும். இனப்படுகொலைகளை உலகம் சரியாகப் புரிந்துகொள்ளச் செயலாற்ற வேண்டும்.

# நல்லெண்ண முயற்சியில் ஈடுபட அமெரிக்கா தயாராக உள்ளது

## விருப்பத்தை வெளியிடுமாறு கோரிக்கை

வாஷிங்டன், செப். 27

சம்பந்தப்பட்ட சகல தரப்பினரும் விரும்பும் பட்சத்தில் இலங்கை இனப் பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்கான நல்லெண்ண முயற்சியில் ஈடுபட அமெரிக்கா தயாராக உள்ளது.

அமெரிக்க மக்கள் பிரதிநிதிகள் சபையில் அண்மையில் நிறைவேற்றப்பட்ட தீர்மானம் ஒன்றில் இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

நல்லெண்ண முயற்சியில் அமெரிக்கா ஈடுபடுவதற்கான தமது விருப்பத்தின் அடிப்படைகளைத் தெரிவிக்குமாறும் சம்பந்தப்பட்ட தரப்பினரிடம் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

தற்போது இடம்பெற்று வரும் யுத்தத்துக்கு முடிவு கண்டு இனப் பிரச்சினைக்கு இறுதியான ஒரு தீர்வைக் காணும் நோக்குடன் இருதரப்பினரும் பேச்சுவார்த்தையில் ஈடுபடவேண்டும் என்றும்—

பொருத்தமான அரசமைப்பு முறைமையுடன் கூடிய ஒரு அரசியல் தீர்வும், சிறுபான்மையினரின் பாதுகாப்புக்கான போதுமான ஏற்பாடுகளுமே ஒருங்கிணைந்த— இறுதியான தீர்வுக்கான பாதையாக அமையும் என்றும் மக்கள் பிரதிநிதிகள் சபையின் தீர்மானத்தில் நம்பிக்கை தெரிவிக்கப்பட்டுள்ளது. [ஐ]

## வடக்கு - கிழக்குக்கு வெளிநாட்டு சத்திர சிகிச்சை நிபுணரை அழைக்க முயற்சி

கொழும்பு, செப். 27

யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலை உட்பட வடக்கு - கிழக்கு மாகாணத்தில் உள்ள பிரதான வைத்தியசாலைகளில் நிலவும் சத்திரசிகிச்சை நிபுணர்களுக்கான பற்றாக்குறையை நிவர்த்தி செய்வதற்காக செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக் குழுவின் ஊடாக வெளிநாட்டு சத்திரசிகிச்சை நிபுணர்களை வரவழைக்க சுகாதார, சமூக சேவைகள், பெருந்தெருக்கள் அமைச்சர் ஏ. எச். எம். பௌஸி முயற்சி மேற்கொண்டிருப்பதாக கொழும்பு தமிழ் வார இதழ் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

ஆறு சத்திரசிகிச்சை நிபுணர்களை வெளிநாடுகளில் இருந்து தருவித்து உதவுமாறு தாம் செஞ்சிலுவைச்சங்க சர்வதேசக் குழுவின் அதிகாரிகளைக் கேட்டுள்ளதாக அமைச்சர் பௌஸி தெரிவித்துள்ளார். (இ-ஐ)

## துறைமுக ஊழியர் நேற்று கடமைக்கு செல்லவில்லை

### 'மாஹோ' கப்பல திரும்பிச் சென்றது

யாழ்ப்பாணம், செப். 27

பருத்தித்துறை துறைமுக ஊழியர்கள் பணிக்குச் சமூகமளிக்காததால் நேற்றுக்காலை பருத்தித்துறைக்கு வந்த ''மாஹோ'' கப்பல் பொருள்களை இறக்காமலேயே திரும்பிச் சென்றது.

பலாலி முகாமில் இருந்து வல்வெட்டித்துறை தெணியம்பை பகுதியை நோக்கி நேற்று படையினர் நடத்திய ஷெல் வீச்சினால் பருத்தித்துறை துறைமுக ஊழியர் ஒருவரின் மனைவி உயிரிழந்தார்.

இதனை அடுத்தே பருத்தித்துறை துறைமுக ஊழியர்கள் நேற்று கடமைக்குச் சமூகமளிக்கவில்லை' இதனை அடுத்தே ''மாஹோ'' கப்பல் காங்கேசன்துறைக்குத் திரும்பிச் சென்றது. [ஐ-3]

## சிறுவர் விளையாட்டு போட்டி

தென்மராட்சி, செப். 27

தமிழீழ விடுதலைப் புலிகள் மகளிர் அமைப்பு சமூகமேம்பாட்டு பிரிவின் கீழ் இயங்கும் வேம்பொடுகேணி கப்டன் சிவா பாலர் பாடசாலை சிறார்களின் மெய்வன்மைப் போட்டிகள் இன்று புதன் பிற்பகல் 2.00 மணிக்கு பாடசாலை மைதானத்தில் நிர்வாகக் குழுத்தலைவர் திரு. த. நிதன் தலைமையில் நடைபெறும்.

போட்டிக்கு முதன்மை விருந்தினராக பளை பிரதேச செயலர் திரு. வா. செந்தில்நந்தனும் சிறப்பு விருந்தினராக பளை பிரதேச சபைச் செயலாளர்திரு கு. ந. பாலசந்திரனும் கலந்து கொள்வர். [ஐ-117]

★ ★ ★

விடுதலைப் புலிகள் மகளிர் அமைப்பு சமூக மேம்பாட்டு பிரிவின் கீழ் இயங்கும் இத்தாவில் வீரவேங்கை சிவராஜ் பாலர் பாடசாலை சிறார்களின் மெய்வன்மைப்போட்டிகள் நாளை பிற்பகல் 2.00 மணிக்கு பாடசாலை மைதானத்தில் நிர்வாகக் குழுத் தலைவர் திரு.க. தனபாலசிங்கம் தலைமையில் நடைபெறும்.

போட்டிக்கு முதன்மை விருந்தினராக பளைப்பிரதேச சபை செயலாளர் திரு. கு.ந. பாலச்சந்திரனும்சிறப்பு விருந்தினராக பளை கல்விக் கோட்ட உதவிப் பணிப்பாளர் திரு ப. அரியரத்தினமும் கலந்துகொள்வர். [ஐ-117]

## ஆசிரியர் கருத்தரங்கு ஒத்திவைப்பு

தென்மராட்சிக் கோட்டப் பாடசாலைகளில் ஆரம்ப விஞ்ஞானப்பாடம் கற்பிக்கும் ஆசிரியர்களுக்கு நடைபெற இருந்த கருத்தரங்கும் செயலமர்வும் தவிர்க்க முடியாத காரணத்தினால் பிற்போடப்பட்டுள்ளன. இக் கருத்தரங்கு 30 ஆம் திகதி மகளிர் ம. வி இல் நடைபெறும் என சாவகச்சேரி பிரதிக்கல்விப் பணிப்பாளர் அறிவிக்கின்றார். [ஐ]

## தியாகி திலீபன்...

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

பரிதி கோட்டையில் தமிழீழ தேசியக் கொடியை ஏற்றினார்.

நல்லூரில் திலீபன் உயிர் நீத்த இடத்தில் அமைக்கப்பட்டுள்ள விசேட நினைவுப் பந்தலில் திலீபனின் உருவப் படத்திற்கு தமிழீழ நீதி நிர்வாகத்துறைப் பொறுப்பாளர் பரா தமிழீழ மாவீரர் பணிமனை மகளிர் பிரிவுப்பொறுப்பாளர் அர்ச்சனா ஆகியோர் மலர்மாலை அணிவித்தனர்.

வடமராட்சியில்

வடமராட்சி கோட்டத்தில் கரணவாய் மூத்த விநாயகர் ஆலய முன்றிலில் அமைக்கப்பட்ட விசேட பந்தலில் இறுதி நாள் நினைவுகள் மிகச் சிறப்பாக நடைபெற்றன.

மாவீரர் பணிமனைப் பொறுப்பாளர் திரு. நீலன் ஈகச்சுடர் ஏற்றினார். அதனைத் தொடர்ந்து நிகழ்வுக்குத் தலைமை தாங்கிய திரு பொழிலன் தியாக தீபம் திலீபனின் உருவப்படத்துக்கு மலரஞ்சலி செலுத்தி அடையாள உண்ணாவிரதத்தை ஆரம்பித்துவைத்தார்.

தென்மராட்சியில்

தியாகதீபம் திலீபனின் எட்டாம் ஆண்டு நினைவு தின நிகழ்வில் தென்மராட்சிப் பகுதியைச் சேர்ந்த ஆயிரக்கணக்கான மக்கள் உணர்வு பூர்வத்துடன் கலந்து கொண்டனர்.

காலை 7-00 மணிக்கு நுணாவில் மணங்குணாய் பிள்ளையார் கோவிலுக்கு அருகில் அமைக்கப்பட்ட பந்தலில் மக்கள் உண்ணா நோன்பை ஆரம்பித்தனர்.

தென்மராட்சிக் கோட்டத்தின் நான்கு வட்டப் பிரிவுகளிலும் இருந்து பெரும் எண்ணிக்கையான மக்கள் விசேட பந்தலுக்கு வந்து சேர்ந்தனர்.

பி.ப 5.00 மணிக்கு உண்ணா நோன்பு முடிவடைந்ததும் மாபெரும் அஞ்சலிக் கூட்டம் நடைபெற்றது.

வன்னியில்

வவுனியா, முல்லைத்தீவு கிளிநொச்சி,மன்னார் மாவட்டங்களிலும் தியாகி திலீபனின் நினைவு நாள் மிகச் சிறப்பாக அனுஷ்டிக்கப்பட்டது.

திருகோணமலை, மட்டக்களப்பு மாவட்டங்களில் ஸ்ரீலங்கா படையினரின் ஆக்கிரமிப்பிலிருந்து விடுபட்ட இடங்களிலும் நினைவு தின நிகழ்வுகளில் மக்கள் உணர்வுடன் கலந்து கொண்டனர்.

(அ-5-15-173-117-31)

# பலஸ்தீன சுயாட்சியை விஸ்தரிக்க இஸ்ரேல் - பி.எல்.ஓ. இணக்கம்

## வியாழனன்று வாஷிங்டனில் ஒப்பந்தம் கைச்சாத்து

கைரோ, செப். 27

யூதக் குடியேற்றத் திட்டங்கள் அமைந்துள்ள மேற்குக் கரையில் பலஸ்தீன சுயாட்சியை விரிவுபடுத்துவதற்காக பலஸ்தீன விடுதலை இயக்கத்திற்கும் (பி. எல். ஓ.) இஸ்ரேலிய அரசுக்கும் இடையில் உடன்பாடு காணப்பட்டுள்ளது.

பலஸ்தீன விடுதலை இயக்கத் தலைவர் யஸீர் ஆரபாத்திற்கும் இஸ்ரேலிய வெளியுறவு அமைச்சர் ஷிமோன் பெரஸுக்குமிடையில் எகிப்தில் இடம்பெற்ற நீண்ட விரிவான பேச்சுக்களையடுத்து இந்த உடன்பாடு காணப்பட்டது.

இந்த உடன்பாட்டிற்கிணங்க மேற்குக் கரையின் முக்கிய நகரத்தில் நிலைகொண்டுள்ள இஸ்ரேலிய ராணுவத்தினர் வாபஸ் பெறப்படுவர். அத்துடன் இஸ்ரேலிய சிறைகளில் வாடும் பலஸ்தீனர்களும் விடுதலையாவர்.

மத்திய கிழக்கில் சமாதானம் தோன்றுவதற்கான நன்னாள் இதுவென தெரிவித்து அமெரிக்க ஜனாதிபதி பில் கிளின்ரன் இந்த உடன்பாட்டை வரவேற்றுள்ளார்.

வாஷிங்டனில் நாளை வியாழக்கிழமை பலஸ்தீன இயக்க — இஸ்ரேல் பிரதிநிதிகளுக்கிடையில் உத்தியோக பூர்வமாகக் கைச்சாத்திடும் வைபவம் நடைபெறும்.

இருபத்தெட்டு ஆண்டுகளாக பலஸ்தீனத்தின் மேற்குக் கரையில் பெருமளவு நிலங்களில் ஆக்கிரமித்திருந்த இஸ்ரேலிய ராணுவம் விலக பலஸ்தீனத்தினர்களிடம் அப்பகுதி வந்து சேருகிறது என்பது குறிப்பிடத்தக்கது.

பல மத்திய கிழக்கு நாடுகள் இந்த உடன்பாட்டை வரவேற்றுள்ளன.

(இ-ஐ-5)

## கண்ணிவெடிகள் குறித்த ஐ. நா. மாநாடு ஆரம்பம்

வீயன்னா, செப். 27

உலகில் நிலக்கண்ணி வெடிகளைத் தடை செய்யும் ஐ. நாவின் மாநாடு ஆஸ்திரிய தலைநகர் வீயன்னாவில் நேற்று முன்தினம் ஆரம்பமானது.

உலகில் அதிகரித்து வரும் நிலக்கண்ணி வெடி ஆபத்துகள் குறித்தும்—

இலக்கின்றித் தாக்கும் ஆயுதங்களின் உற்பத்தி, விற்பனை மற்றும் பயன்பாடு என்னவற்றைத் தடுப்பது தொடர்பாகவும் இந்த மாநாட்டில் ஆராயப்படுகிறது.

மொஸாம்பிக், அங்கோலா, கம்போடியா, முன்னாள் யூகோஸ்லாவியா ஆகியன உட்பட மொத்தம் 64 நாடுகளில் 11 கோடி கண்ணிவெடிகள் புதைக்கப்பட்டிருப்பதாக ஐ நா. வின் அறிக்கை ஒன்று தெரிவிக்கிறது.

தரைக் கண்ணிவெடிகளில் சிக்குவதால் உலகில் வாராந்தம் 400 பேர் உயிரிழக்கின்றனர் அல்லது அங்கவீனராகின்றனர் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்டனப் பேரணியில் அணிதிரள கல்விச் சமூகத்துக்கு அறைகூவல்

யாழ்ப்பாணம், செப். 27
வெகுஜன அமைப்புகளின் ஒன்றியம் எதிர்வரும் வெள்ளியன்று நடாத்தவுள்ளமாபெரும் கண்டனப் பேரணியில் கலந்து கொண்டு சிறீலங்கா அரசின் கொடுமைகளை உலகுக்கு வெளிப்படுத்துமாறு தமிழீழ கல்விச் சமூகத்திடம் தமிழீழ கல்வி மேம்பாட்டுப் பேரவை வேண்டுகோள் விடுத்துள்ளது.

இது தொடர்பான தீர்மானம் கடந்த திங்களன்று நடாத்த சிறப்புக் கூட்டத்தில் தமிழீழ கல்வி மேம்பாட்டுப் பேரவையால் எடுக்கப்பட்டுள்ளது.

அத்தீர்மானத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

செய்தித் தடை என்னும் இருப்புத் திரைக்குப் பின்னால் சிறீலங்கா அரசு நாகர் கோவில் மகா வித்தியாலயச் சூழலில் விமானக்குண்டு வீச்சையும் எறிகணை வீச்சையும் நிகழ்த்தி 20க்கும் மேற்பட்ட மாணவர்களின் உடல் சிதற உயிரைக் குடித்தும் பல மாணவர்களின் கை கால்களைத் தறித்தும் தமிழீழத்தின் கல்விக்குப் பேரழிவையும் அச்சுறுத்தலையும் ஏற்படுத்தியதைக் கண்டித்து வெள்ளியன்று வெகுஜன அமைப்புக்களின் ஒன்றியம் ஏற்பாடு செய்யும் கண்டனப் பேரணியில் தமிழீழக் கல்விச் சமூகம் முழுமையாகக் கலந்து கொள்வது அதன் வரலாற்றுக் கடமை என்று உணர்வதால் தமிழீழத்தின் கல்விசார் அமைப்புக்கள், நிறுவனங்கள், அனைத்தும் கண்டனப் பேரணியில் தவறாது கலந்து கொண்டு சிறீலங்கா அரசின் கொடுமைகளை உலகுக்கு வெளிப்படுத்த உதவவேண்டுமென்றும்—

கண்டன அறிக்கைகளை விடுக்கவேண்டும் என்றும் தமிழீழக் கல்வி மேம்பாட்டுப் பேரவை வேண்டிக்கொள்கின்றது.

பேரணிக்குத் தேவையான அனைத்து உதவிகளையும் வழங்குவது என்றும் கண்டனப் பேரணியின் கட்டாயத்தை விளக்கும் வகையில் கல்விக் கோட்டங்கள் தோறும் நடைபெறும் அதிபர்கள் கூட்டங்களில் பேரவை உறுப்பினர்களும் கலந்து கொள்வது என்றும் தீர்மானிக்கப்பட்டுள்ளது. (ஐ)

## மரண அறிவித்தல்கள்

### இராமலிங்கம் இரட்ணசிங்கம்

கூல்ட் ஹவுஸ், டச்சுவீதி, உடுவிலைச் சேர்ந்த இராமலிங்கம் இரட்ணசிங்கம் 26-09-95 அன்று காலமானார்.

இவர் இராஜேஸ்வரியின் அன்புக் கணவரும், இராஜசிங்கம் (சுவிஸ்), விமலகுமாரி (ஆசிரியை-Man's School), ஈசன் (சுவிஸ்), ஜெயம் (சுவிஸ்), சுகந்தன் (சுவிஸ்), சிலன் ஆகியோரின் அன்புத் தந்தையும், கலாவதி, பாமினி, கீதாஞ்சலி ஆகியோரின் அன்பு மாமனாரும், பாலசிங்கம், சந்திரன், கணநாதன், அப்பையா, மங்கயேஸ்வரி ஆகியோரின் மைத்துனரும், நிரோன், நிரேஸ், நிவேத், சாளினி, ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (27-09-95) காலை 10-00மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் பூவோடை மயானத்தில் தகனம் செய்யப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்

தகவல்:
சிலன்
(மகன்)

டச்சுவீதி, உடுவில்

[38694]

### கந்தையா குமாரலிங்கம்

(நீர்ப்பாசன இலாகா முல்லைத்தீவு)

சங்கானையைப் பிறப்பிடமாகவும், மயிலிட்டி தெற்கு கட்டுவனை வசிப்பிடமாகவும் கொண்ட குமாரலிங்கம் நேற்று (26-09-95) காலமாகிவிட்டார்.

இவர் காலஞ்சென்ற கந்தையா இராசம்மாவின் அன்பு மகனும், ஞானேஸ்வரியின் (குஞ்சு) அன்புக் கணவரும், ஞானகுமாரின் (லண்டன்-மாணவன்)பாசமிகு தந்தையும், காலஞ்சென்றவர்களான ஆறுமுகம் சுந்தரம் தம்பதிகளின் மருமகனும், சண்முகலிங்கம் (மெக்கானிக் வவுனியா), மயில்வாகனம் (பிரான்ஸ்) திருமதி இராசமலர், திருமதி மணிமலர், திருமதி நேசமலர் ஆகியோரின் சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் அவரது தாயாரின் இல்லத்தில் இன்று பிற்பகல் 2-00 மணியளவில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைகளுக்காக வழுக்கையாறு மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும் என்பதை உற்றார், உறவினர், நண்பர்களுக்கு அறியத்தருகின்றோம்.

தகவல்:
செல்வி ம. பாலினி
(பெறாமகள்)
திருமதி இ. மணிமலர்
[சகோதரி]

பழைய தபால் கந்தோர் வீதி,
சங்கானை கிழக்கு,
சங்கானை.

[38705]

### மேரி ஸ்ரெலா லீலிமலர்

ஊர்காவற்றுறையைப் பிறப்பிடமாகக் கொண்ட மேரி ஸ்ரெலா [26-9-95] நேற்று யாழ்ப்பாணத்தில் காலமானார்.

இவர் பவுலப்பரின் [இளைப்பாறிய சுங்கஇலாகா உத்தியோகத்தர்] அன்பு மனைவியும், கிறீஸ்துதாசன், றீற்றா, ஜெசி, றெக்சன் ஆகியோரின் பாசமிகு தாயாரும் ஜெசிந்தா, யூலியஸ், நாதன், ஜெபநேசன் ஆகியோரின் அன்பு மாமியாரும், காலஞ்சென்றவர்களான அந்தோனிப்பிள்ளை சம்பூரணம் ஆகியோரின் அன்பு மகளும், துரைசிங்கம், மரிஸ்ரெல்லா, சந்திரன், மதுரம், ஜெயசீலி ஆகியோரின் அன்புச் சகோதரியும், டொனிற்றா, பிரசாத், துஷாத், ஜெயசாத், ஜெயன்ரா, அபர்ணா, பற்றீசியா ஆகியோரின் அன்பு பேர்த்தியுமாவார்.

ஈமக்கிரியைகள் இன்று [27-9-95] பி. ப 2. 30 மணிக்கு நடைபெறும். உறவினர், நண்பர்கள் இவ்வறிவித்தலை ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
பவுலப்பர்
(கணவன்)

78, பழைய பூங்காவீதி,
சுண்டிக்குளி,
யாழ்ப்பாணம்.

(38707)

## 6 கோடி...

[1 ஆம் பக்கத்தொடர்ச்சி]

அவர் மேலும் தெரிவித்திருப்பதாவது:-

1958 ஆம் ஆண்டில் கைச்சாத்திடப்பட்ட பண்டா — செல்வா ஒப்பந்தம் இன ஐக்கியத்தை சாதகமான முறையில் உருவாக்குவதை நோக்கமாகக் கொண்டிருந்தது. ஆனால் தீவிரவாத சக்திகள் அதை அமுலாகாமல் தடுத்து முறியடித்து விட்டன.

நாங்கள் தீவிரவாதிகளாக இருக்கும் வரை நாட்டின் யதார்த்தமான பிரச்சினைகளைப் பிரதிபலிக்கமாட்டோம். எமது அடிப்படைப் பிரச்சினைகள் தீர்க்கப்படாமலே எஞ்சும்.

சிங்களவர்களின் கௌரவம் பாதுகாக்கப்படும் அதே வேளையில் எல்லா சிறுபான்மை இனத்தவரினதும் கௌரவம் பாதுகாக்கப்பட வேண்டும்.

1988 ஆம் ஆண்டு ஜனாதிபதித் தேர்தலில் அதிகாரப் பரவலாக்கலுக்குரிய திட்ட யோசனைகளை வாக்காளர்களுக்கு வழங்கியிருந்தோம். ஒரு நீடித்த தீர்வு தேவைப்படும் இக்கட்டான தருணத்தில் அன்று நாடு இருந்தது.

எமது நாட்டைப் பாதித்திருக்கும் இனப்பிரச்சினைக்கு நீடிக்கக்கூடிய தீர்வு ஒன்றை வழங்கக்கூடிய தீர்வுத்திட்ட யோசனைகளை தற்போதும் சமர்ப்பித்துள்ளோம். இதன் மூலம் நாட்டின் ஒற்றுமையைப் பாதுகாக்கலாம். நாடு பிளவுறுவதை அனுமதிக்க முடியாது. — இவ்வாறு அவர் தெரிவித்தார்.

## வடக்குக்கான---

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

தற்போது இக்கப்பல் மீண்டும் திருமலை சென்று மா ஏற்றிக்கொண்டு கொழும்புக்குச் செல்லவிருப்பதாக கொழும்புத் தகவல்கள் தெரிவித்தன.

குடாநாட்டில் மாவுக்குத் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ள இந்நேரத்திலும் இங்கு மா ஏற்றிவருவதற்கான பணிப்புரையை புனர்வாழ்வு, புனரமைப்பு அமைச்சு 'ஹெந்தல' கப்பலுக்கு வழங்கவில்லை என்றும் தெரியவந்தது.

மழைக்காலத்துக்கு முன்னர் போதியளவு மாவை யாழ். மாவட்டத்துக்கு எடுத்துவந்து களஞ்சியப்படுத்தும் நோக்கில் பெருந்தொகைப் பணத்தைச் [illegible] அமர்த்தியிருந்தார்.

(ஐ-3)

## பாரிய படை...

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

கூடிய இடங்களில் படையினரைத் தக்கவைத்துக் கொள்ள அரசு திட்டமிட்டிருந்ததாகவும்—

கொழும்புத் தகவல்கள் தெரிவிக்கின்றன;

ஆனால் —

அடுத்தடுத்து பல கடற்படைக் கலங்கள் விடுதலைப் புலிகளால் அழிக்கப்பட்டதாலும்—

"அவ்ரோவ்" ரக விமானம் ஒன்று கடலுக்குள் வீழ்ந்து அழிந்ததாலும்—

அதே ரகத்தில் உள்ள ஏனைய இரு விமானங்களும் பறக்காமல் நிறுத்திவைக்கப்பட்டிருப்பதாலும்—

இராணுவ நடவடிக்கைத் திட்டத்தை ஒத்திவைக்க அரசு முடிவு செய்ததாக அறியவந்தது.

அண்மையில் நடைபெற்ற பாதுகாப்பு உயர் மாநாட்டில் இதுபற்றித் தீர்மானிக்கப்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டது.

எனினும்—

வடக்கில் பெருமளவு குவிக்கப்பட்டுள்ள படையினரைப் பயன்படுத்தி வடக்கில் பல முனைகளிலும் முன்னேறி சிறு சிறு இராணுவ நடவடிக்கைகளை மேற்கொள்ள அரசு முடிவு செய்திருப்பதாகவும் தெரியவந்தது. (க-9)

## நிதி கையளிப்பு வைபவம் ஒத்திவைப்பு

யாழ்ப்பாணம், செப். 27
யாழ். மாவட்ட தனியார் கல்வி நிறுவனங்களின் தேசிய பாதுகாப்பு நிதி கையளிக்கும் வைபவம் இன்று புதன்கிழமை பிற்பகல் 5 மணிக்கு நல்லூர் கந்தசுவாமி கோவில் முன்றிலில் நடைபெறும்என முன்னர் அறிவிக்கப்பட்டிருந்தது, அது தற்போது ஒத்திவைக்கப்பட்டுள்ளது என்று தனியார்கல்வி நிறுவன நிர்வாகப் பிரிவு அறிவித்துள்ளது.

மாணவர்கள், ஆசிரியர்கள், நிர்வாகிகள், உரிமையாளர்கள் ஆகியோர் இந்த வைபவத்துக்கு அழைக்கப்பட்டிருந்தனர். (ஐ)

## படைகளை எதிர்கொள்வதில்...

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

கூட்டத்தில் பேசுகையிலேயே அவர் இப்படிக் கூறினார்.

அவர் மேலும் பேசுகையில் கூறியதாவது:-

சிங்கள அரசு ஆயுதங்களைக் குவித்தோ, கூடுதல் படைகளை சேர்த்தோ எம் மீது பெரும் போரைத் திணிக்கலாம். ஆனால் அதனை எதிர் கொள்ள எமது தலைவரின் வழிகாட்டலில் நாம் நிதானமாக — தயாராக — இருக்கிறோம்.

தேசிய இனம் ஒன்று விடுதலை பெற வேண்டுமானால் அந்த இனம் தியாகச் செயற்பாட்டில் இறங்க வேண்டும் என்ற புதிய வரைவிலக்கணம் ஒன்று இப்போது சர்வதேச மட்டத்தில் உருவாகியுள்ளது

திலீபன் உட்பட மாவீரர்களின் தியாகங்கள் ஊடாக நாம் இந்த வரைவிலக்கணத்துக்குள் நிற்கின்றோம்.

திலீபனின் தியாகம் எமது போராட்டத்தில்ஒருமைல்கல்; அவர் ஒரு கலங்கரை விளக்கு; அவர் வரலாற்றுத் திருப்பத்தில் நின்றார்.

### வரலாற்றின் திருப்புமுனை

இன்று நாம் முக்கியமான தீர்க்கமான இறுதியான காலகட்டத்தில் நிற்கின்றோம். வரலாற்றின் திருப்புமுனையில் நிற்கின்றோம்.

அடுத்து என்ன நடக்கப் போகிறது என்பதை உணர்ந்துநாம் அதற்குத் தயாராக இருக்கிறோம்.

கடந்த நூறு ஆண்டு காலமாக பல கட்டங்களாக எமது போராட்டங்கள் தொடர்ந்தன. பலவகையான வழிமுறைகளைக் கையாண்டோம். ஆனால் இறுதியில் சிங்கள இனம் எம்மை ஏமாற்றி விட்டதாக கவலைப்பட்டோம்.

1910 ஆம் ஆண்டிலிருந்து சேர். பொன். இராமநாதன் காலம், செல்வா காலம், இந்தியா தலையிட்ட காலம் என்று பல கால கட்டங்களை கடந்து இன்று இறுதிக் கால கட்டத்தில் நிற்கின்றோம்.

ஒவ்வொரு கால கட்டத்திலும் எமது தலைவர்களாக விளங்கியவர்கள் "கடவுள் தான் உதவ வேண்டும்; தமிழீழம் தான் விடிவுக்கு வழி" என்று கூறியிருந்தார்கள்.

### புதிய பரிமாணம்

ஆனால் போராட்டம் இன்று புதிய பரிமாணத்தை பெற்றுவிட்டது.

எமது போராட்டத்தால் தெளிவான — தீர்க்கமான முடிவுகளை எடுக்கும் — ஒரு கால கட்டத்துக்கு நாம் வந்து விட்டோம்.

தெளிவான — வீரமிகு — போராட்டத்தை நாம் இன்று முன்னெடுத்து நிற்கின்றோம். அதில் ஏமாற்றத்திற்கு இடமில்லை.

இன்று இங்கு திலீபனை நாம் நினைவு கூரும் அதே வேளையில் தெற்கிலும் பண்டாரநாயக்காவுக்கு விழாக் கொண்டாடுகிறார்கள்.

"பண்டா — செல்வா ஒப்பந்தம் நிறைவேறியிருந்தால் இந்நிலை வந்திராது" என்று தெற்கில் நீலிக் கண்ணீர் வடிக்கிறார்கள்.

இனியும் எம்மை ஏமாற்ற முடியாது.

### ஏமாற்ற முடியாது

சந்திரிகா அமைச்சரவையைக் கூட்டி வடக்கு மீதான தாக்குதல் குறித்து ஆராய்கிறாராம். "போதிய ஆயுதங்கள் வந்து சேரவில்லை. வந்து சேர்ந்ததும் இறுதித் தாக்குதல் ஆரம்பிக்கும்" என்று சந்திரிகா அங்குகூற சகல அமைச்சர்களும் தலையாட்டுகிறார்கள்.

இவ்வாறு கூறுவதன் மூலம் சந்திரிகா சிங்கள மக்களை ஏமாற்றலாம். எம்மை ஏமாற்றமுடியாது என்பதை அவர் உணரவேண்டும்.

### ஆயுதத்தால் வெற்றிபெற முடியாது

அரசு ஆயுதத்தைக் குவித்தோ கூடுதலாக ஆட்களை படைக்குச் சேர்த்தோ வெற்றிகொள்ள முடியாது.

வியட்நாமில் ஆயுதங்களை குவித்த அமெரிக்காவினாலோ, ஆப்கானிஸ்தானில் ஆயுதங்களை குவித்த ரஷ்யாவினாலோ வெற்றி பெறமுடியாது போன வரலாறு எமக்குத் தெரியும்.

அரசு கொள்வனவுசெய்யும் டாங்கிகளோ, விமானங்களோ எமக்குத் தெரியாதவையல்ல. இந்திய இராணுவம் கொண்டு வந்த இதே வகையான டாங்கிகளையும், விமானங்களையும் எதிர் கொண்ட வரலாறு எமக்கு உண்டு.

### மக்கள் இணையவேண்டும்

தலைவர் ஊடாக, தியாகி திலீபன் ஊடாக, கரும்புலிகள் ஊடாக நாம் தெரிவிக்கும் செய்திகளை உணர்ந்து மக்கள் எம்முடன் இணைந்து செயற்படவேண்டும்.

எமக்கு எதிராக வரும் எந்தவித நெருக்கடிகளையும் சந்திக்க நாம் தயாராக இருக்கிறோம் என்பதை நீங்கள் உணரவேண்டும்.

எதிரியை எதிர்கொள்வதில் எம்மிடத்தில் குழப்பம் எதுவும் இல்லை. நிதானமாகவே இருக்கிறோம்— என்றார்.

நிதர்சனம் பொறுப்பாளர் தமிழன்பன், தமிழீழ கல்வி மேம்பாட்டுப் பேரவைத் தலைவர் வண. பிரான்சிஸ் ஜோசேப் அடிகள், பெண்கள் புனர்வாழ்வுப் பிரிவுப் பொறுப்பாளர் சுடரவள் ஆகியோரும் உரையாற்றினர்.

இறுதியாக கலை நிகழ்ச்சிகளும் இடம்பெற்றன.

இப்பத்திரிகை நியூ உதயன் பப்பிளிகேசன் [பிறைவேட்] லிமிட்டெட்டினரால் யாழ்ப்பாணம் நாவலர் வீதி, 292/2 இலக்கத்திலுள்ள அச்சகத்தில் 27 - 09 - 95 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org